LIBRARY
JUN 2010
Eastern University, Sri Lanka

கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு பகுதி - III 2009/2010
(நவெம்பர்/டிசம்பர் 2010)

## SOCS 4104 Sociology of Mass Media and Mass Communication

நேரம் : 03 மணித்தியாலங்கள்

பகுதி-I இலிருந்து மூன்று(03) வினாக்களுக்கும், பகுதி-II இலிருந்து ஒரு வினாவுக்குமாக எல்லாமாக நான்கு வினாக்களுக்கு விடை தருக.

### பகுதி – I

01.(அ) தொடர்பாடலின் வகைப்பாடுகள் யாவை? எடுத்துக் காட்டுகளுடன் விளக்குக.

(13 புள்ளிகள்)

(ஆ) பாரம்பரியமான தொடர்பாடலுக்கும், வெகுசனத் தொடர்பாடலுக்கும் (Mass Communication) இடையிலான வித்தியாசங்களை தெளிவுபடுத்துக.

(12 புள்ளிகள்)

02.(அ) வெகுசனத் தொடர்புசாதனங்கள் பண்பாட்டினைப் பாதிக்கும் வழிமுறைகள் பற்றி விபரிக்குக.

(13 புள்ளிகள்)

(ஆ) மனித இடைவினையில் மக்கள் திரள் ஊடகங்கள் (Mass Media) எத்தகைய செல்வாக்கைச் செலுத்துகின்றன என்பதைப் பரிசீலிக்குக.

(12 புள்ளிகள்)

03.(அ) "புத்தகங்களின் பரவலும், வாசிப்பும் இன்னுமொரு சமூக அதிகாரத்தை (Social Power) கட்டமைத்துள்ளது." என்னும் வாதத்தை ஏற்றுக்கொள்ளலாமா? விளக்குக.

(13 புள்ளிகள்)

(ஆ) சஞ்சிகைகளின் உருவாக்கம், அவற்றின் இலக்கு, வகைப்பாடு என்பவற்றினைத் தக்க எடுத்துக்காட்டுகளுடன் விபரிக்குக.

(12 புள்ளிகள்)

04.(அ) மக்கள் திரட் சமூகம் (Mass Socioty) பற்றிய சீ.ரைட்ஸ் மில்ஸ்(Write molls) என்பாரின் கருத்துக்களைத் தொகுத்துரைக்க.

(13 புள்ளிகள்)

(ஆ) இணையத்தளப் பாவனையின் பின் உருவாகிவரும் புதிய சமூகத் தொடர்பாடற் கோலங்கள் தொடர்பில் ஒரு மதிப்பீட்டினை மேற்கொள்க.

(12 புள்ளிகள்)

## பகுதி – II

01. "மானுட சிந்தனை முறைமையிலும், வாழ்வியற் போக்கிலும், பண்பாட்டுச் சித்திரிப்புக்களிலும் வெகுசனத் தொடர்பு சாதனங்களின் செல்வாக்கு கணிசமாகப் படிந்து பிரதிபலிக்கிறது." இக்கூற்றின் இயைபுத் தன்மை பற்றி ஊடகச் சமூகவியலின் புலப்பதிவில் நின்று பகுப்பாய்வு செய்க.

(12 புள்ளிகள்)

02. இந்திய தென்னகத் தமிழ்த் தொலைக்காட்சித் தொடர்கள், மத்தியதரவர்க்கத்தைச் சார்ந்த பெண்கள் குழுமந்தை எவ்வெவ் வழிகளில் பாதிக்கின்றன என்பது தொடர்பில் உதாரணங்களுடன் விமர்சனக் கட்டுரை ஒன்று வரைக.

(12 புள்ளிகள்)

********